தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸூ ஆனிமீ 21உ (5-7-'22.) | ப. 11.

ஓர் விளம்பரம்.

இந்த வாரம் நமது பத்திரிகைப் பன்னிரண்டு பக்கங்களுடன் வெளியாயிருக்கின்றது. இந்தியாவைப் பற்றிய சமாசாரங்களே இதில் பெரும்பாலும் அடங்கியுள்ளன. மேலும் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் பண்டிதர்கள் பலர் எழுதிவருவார்கள். இதுவரையில் எழுதப்பட்டதெல்லாம் முழுவதும் ஆரம்பமே. இனியும் நாம் பதினாறு பக்கமாகப் பெருக்குவது, நமது நாட்டினரின் ஆதரவையே பொருத்தது. கல்கத்தா யூனிவர்ஸிடியில், சமீபத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைவரையில் எல்லா விஷயங்களும் பையன்களுக்கு அவர்களின் தாய்பாஷையிலேயே கற்பிக்கப்பட வேண்டுமென்று சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. வங்காளத்தில் எப்படி பெங்காலி பாஷை யெங்கும் வியாபித்துக்கொண்டாடப்பட்டு வருவதென்பதை நம் நேயர்கள் அறிந்திருப்பார்கள். அப்படியே நமது நாட்டிலும் தமிழ் செழித்தோங்க வேண்டுமென்றால், நாம் எல்லோரும் தமிழை மிக்கப் பெருமையுடன் கொண்டாடுவது முற்றிலுமவசியம். இத்தமிழ் உலகையும் நம்மிடம் அன்பு பாராட்டித்தமிழர்கள் ஆதரித்து வந்தாலொழிய, நமக்கென்ன உத்சாக மிருக்கக்கூடும்? இப்பகுதியையே மாதிரிக்காகத் தங்களுக்கனுப்பி யிருக்கின்றோம். இத்தமிழ் உலகு பத்திரிகையைத் தாங்களபேக்ஷிக்காவிடில், தயவுசெய்து நமக்குடனே தெரிவிக்கப் பிரார்த்திக்கின்றோம். தாங்கள் ஒன்றையுமே எழுதாவிட்டால், அடுத்த பகுதியை வி. பி. மூலம் தங்களுக்கனுப்பத் துணிகின்றோம். மேலும் அதை தயவுசெய்து பெற்றுக்கொள்வீர்களென்றே நாம் நம்புகிறோம்.

கசுஉ, பசுபதி அக்கிரஹாரம், மைலாப்பூர், மதராஸ். — மானேஜர், தமிழ் உலகு காரியாலயம்.

THE TAMIL WORLD

WE have received from the Publisher, 16, Pasupati Agraharam, Mylapore, the first number of the "Tamil Ulagu" (Tamil World) a new Tamil weekly devoted to politics, literature and the arts. In politics it is an independent nationalist organ and gives its full support to the Bardoli programme. It is written in easy, elegant and popular Tamil and the first number contains very interesting articles on "The position of India in the last (Tamil) year". "The geological formation of the earth" and "The Empire of the mind" and a sympathetic review of the first two volumes of the late Mr. C. Subramanya Bharati's works which have just been published. The editorial "Ourselves" declares that the object of the promoters of the journal is to give adequate and permanent expression to the surging new life in the Tamil land. If further issues maintain the level of the first number, the journal deserves to succeed; and we wish it a prosperous career. The annual subscription is Rs. 5 and the half-yearly subscription Rs. 3.

'The Daily Express'

A New Tamil Weekly

WE commend to the reading public the "Tamil World," a new Tamil weekly published at Mylapore. The promise of the first and the second issues which we have received will gladden those interested in the new vernacular movement. Mr. Pattabhiraman, M. A. assisted by a number of talented and enthusiastic young men, will be the Editor. With Congress politics and wide sympathies with Science and Literature, we hope that the weekly will receive good support. The annual subscription of Rs. 5 is fair, as the get-up is quite attractive.

'The Hindu'

TAMIL WORLD

WE welcome with pleasure the first issue of the "Tamil World," a new Tamil weekly, published at Mylapore, which we gather, is the fruit of the conjoint labours of a group of brilliant young men with Mr. S. Pattabhiraman, M. A, as the Editor. The first issue is quite promising and the contents are varied and interesting. If the future numbers realise the promise of the first, with more of variety and less of scholarly length, the "Tamil world" would prove an asset.

'The Swarajya'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப் படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப் பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ் பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பல வகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெறவேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலுட் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

(தபால் கூலியுள்பட சந்தா)

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0

அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

தமிழ் உலகு' காரியாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்

மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

வியாசங்கள். (பத்திராதிபர் எழுதியது)

1.	இந்தியர்களும், குடியேற்றமும்	83
2.	லார்ட் விண்டர்டன்	84
3.	Rt. Hon. V. S. ஸ்ரீநிவாச சாஸ்திரியார்	86
4.	கர்னல் வெட்ஜ்வுட்	,,
5.	மகாத்மாவின் கைங்கரியம்	87
6.	மோதிலால் நேரு	,,
7.	Hon. C. Y. சிந்தாமணி	88

ஸாஹித்யம்.

8.	புயற் காற்று .... (ஸ்ரீமான் V. நாராயணய்யர், M.A., M.L., எழுதியது) .... மகாகவி ரவீந்திர நாத் டாகூரின் 'ரெக்' என்னும் கதையின் மொழி பெயர்ப்பு	,,

சரித்திரம்.

9.	மலையாளத்தில் மாந்திரிகம் .... (பத்திராதிபர் எழுதியது)	90

வைத்தியம்.

10.	கான்ஸர் ரோகம் .... (பத்திராதிபர் எழுதியது)	91

தமிழ் உலகு

துந்துபிஸு ஆனிமீ 21உ

இந்தியர்களும்; குடியேற்றமும்.

பஞ்சமும், பிணிகளும் நிறைந்திருக்கும் இவ்விந்தியாவில், ஜன நெருக்கத்தால், கூலிவேலை கூட பல காலங்களில் கிடைக்காமல் போவதால், ஏழைஜனங்கள் வேறெங்கேயாவது சென்று பிழைப்போம் என்ற எண்ணத்துடன், சிலோனுக்கும், சிங்கப்பூர், பினாங் முதலிய நாடுகளுக்கும், மோரிஸுக்கும், தென்னாபிரிகாவில் நேடால், டிரான்ஸ்வால் இத்தேசங்களுக்கும் பெரும்பாலும் செல்வது வழக்கம். மேலும் இவர்களைத்தவிர, வியாபாரத்திற்காகவும் இந்தியர்கள் அநேகர் ஆங்காங்கு குடித்தனத்துடன் தங்கியிருக்கிறார்கள். இத்தேசங்களனைத்தும் பிரிடிஷ் ஜனங்களின் ஆளுகைக்குட்பட்டேயிருக்கின்றன. ஆதியில் ஒவ்வொரு இடத்திலும்ஐரோப்பியர்கள் புதிதாய்க் குடியேறினவுடன், காடுகளை அழிக்கவும், சுரங்கங்களில் வேலை செய்யவும், இன்னமும் கரும்புத் தோட்டங்களிலும் உழைப்பதற்கும், காபி, டீ, இவைகளைப் பயிரிடுவதற்கும், இந்தியாவிலிருந்து கூலியாட்களை அவர்கள் தருவித்துக் கொண்டார்கள். சொல்பசம்பளத்துடன் இந்தியர்கள் திருப்தியடைகின்றவர்களாதலால், இவ்வேலைக்காரர்களை வைத்துக் கொள்வதே லாபகரமாயிருப்பதை ஐரோப்பியர்கள் நன்குணர்ந்தார்கள். ஆகிலும் இவர்களால் ஆகவேண்டிய காரியங்கள் முடிந்தவுடன், இவர்கள் அவமதிக்கப்பட்டார்கள். ஏனெனில் இந்தியாவிலிருந்து வரும் வேலையாட்கள் அங்கங்கே போட்டிபோடுவதால், ஐரோப்பிய கூலிக்காரர்களுக்குப் பிழைப்பில்லாமல், எளிதில் அடித்துவிடக்கூடும். இதுவே குடியேற்றநாடுகளில் இந்தியர்கள் குரூரமாய் நடத்தப்பட்டதற்கு மிகவும் முக்கிய காரணம்.

சென்ற வாரத்தில், இந்தியாவின் க்ஷேமத்தையே கருதும் ஆங்கிலேயர்கள் இருவர், தென்னாபிரிகாவிலும், கென்யாவிலும், பிஜியிலும், இருக்குமிந்தியர்களின் ஸ்திதி எவ்வளவு தூரம் ஆபத்துகளுக்கிடமாயிருக்கின்றதென்று இத்தேச முழுமையும் ஓர்விளம்பரம் விடுத்திருக்கிறார்கள். அதைப் படிக்குங்கால், மான முள்ளவனாகில், நமக்குள் எவனுக்கும் இரத்தம் கொதிக்கும். (C. F. ஆண்ட்ரூஸ், H. S. L. போலக், இவ்விருவர்களைப்பற்றி எல்லோரும் கேட்டிருப்பார்கள். இருவரும் மகாத்மா காந்தியின் பக்தர்கள். போலக் என்பவரோ தென்னாபிரிகாவில் மகாத்மா காந்தி அக்கவர்மெண்டாருடன் போராடுகையில், அவருக்குத் துணையாய் நின்று, ஜெயிலுக்கும் சந்தோஷத்துடன் சென்றிருக்கிறார். இவர்கள் சொல்வதைப் பார்த்தால், இந்தியர்களை மிலேச்சர்களுக்கும் இழிவாகவே அத்தேசங்களில் ராஜாங்கத்தார் நடத்தத் தீர்மானித்திருப்பதாய்த் தெரிகின்றது. ஒரே சக்கிரவர்த்தியின் பிரஜைகளாயிருக்கும் நாம் அவருடைய ராஜ்யத்திலேயே அவமதிக்கப்படுவதைப் பொறுத்திருப்போமேயாகில், நம்மை உயிருடன் தூக்கு மரத்தில் கட்டி, மானங்கெட்ட நாய்கள் என்று நம்மீது பிறர் துப்புவதும் சகஜமே. ஆபிரிகாவிலும்,பிஜியிலும், நமது ஸகோதரர்களின் அவஸ்தையை நன்றாயுணர்ந்து, நாம் உடனே விழித்துக் கொள்ளவேண்டுமென்றே இவ்விருவரும் ஆக்கிரஹத்துடன் நீண்டதோர் விளம்பரத்தை விடுத்திருக்கின்றார்கள். இப்போது நாம் சிறிதும் கண்ணசைந்து போய்விட்டால், எல்லாம் மிக்க துக்ககரமாகவே பரிணமிக்குமென்று இவ்விருவரும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இந்தியா முழுவதும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஒவ்வோரிடத்திலும் கூடி, பிரிடிஷாரின் ராஜ்யத்திலெங்கும் தமக்குச் சகல ஸ்வாதீனங்களு முண்டென்பதை நிலைநாட்ட முயற்சி செய்யவேண்டும். இத்தருணத்திலேயே இந்தியா கவர்மெண்டாரும், குன்றென நிமிர்ந்து நின்று, இந்தியர்களின் கக்ஷியை வாதிப்பதுடன், கொஞ்சமேனும் பின்வாங்காது குடியேற்ற நாடுகளில் இந்தியர்களுக்கு நேர்ந்து வந்திருக்கும் இவ்வவமானத்தைத் துலைத்தே தீரவேணும். இந்தியர்களான நாம் தைரியத்துடனும், ஆவேசத்துடனும் இக்ஷணம் கிளம்பினால் தான், நமக்காக இந்தியா கவர்மெண்டார் சொல்வதும் பிரிடிஷ் மந்திரிகளின் காதில் விழக்கூடும்.

தென்னாபிரிகாவில் நேடாலில் இருக்கும் இந்தியர்களுக்கே ஓர் பெரிய கண்டம் சமீபத்தில் வருமென்று C. F. ஆண்ட்ரூஸ், H. S. L. போலக் இவ்விருவர்கள் பயப்படுகின்றார்கள். நேடாலில் தான் இந்தியர்களின் எண்ணிக்கைக் கூடவேயிருக்கின்றது. இந்த க்ஷணத்தில் நேடால் நாட்டின் வளமை முற்றிலும் இந்தியர்களின் பிரயாசத்தாலேயே பெருகியது. மிகவும் சுலபமாகக்

கிடைத்த இந்திய வேலைக்காரர்களின் உதவியன்றியில், நேடால் முழுவதும் ஒரே பொட்டலாகத்தானிருக்குமென்று இவர்கள் சொல்வதை நாம் கவனிக்கவேண்டும். மேலும் இக்காலத்திலங்கு வசிப்பவர்களெல்லோரும் அவ்வூரிலேயே பிறந்து வளர்ந்தவர்களே ஒழிய, வேறு ஒருவருமில்லை. இந்தியர்கள் யாரும் தென்னாபிரிகாவில் குடி யேறக் கூடாதெனத் தடுக்கப்பட்டிருந்தும், ஐரோப்பியர்கள் மாத்திரம் தாராளமாயங்கே வருவதால், ஜனத்தொகையில் இந்தியர்களே மிக்கக்குறைந்தவர்கள். முதல் முதலில் இவ்விந்தியர்கள் நேடாலில் வந்து குடியேறும்படி ஐரோப்பியர்களாலேயே அழைக்கப்பட்டார். ஆகினும் இப்போது அங்கிருக்கும் இந்தியர்களைத் திரும்ப இந்தியாவிற்கனுப்பவும், மேலும் இவர்களை அவ்வூரிலேயே ஒதுக்கி வைப்பதற்கும் ஓர் சதியாலோசனை செய்யப்படுகின்றது. இதை ஸர் ஜான் லாங் என்பவரே ஒத்துக்கொள்ளுகிறார். இதுவரையில் தென்னாபிரிகாவில் கவர்மெண்டார் லோகாபவாதத்திற்கு பயந்தே இந்தியர்களை நிர்தாக்ஷிண்யமாய் நடத்தத் தயங்குகிறார்கள். இருந்தாலும் ஒருகாலத்தில் ஐரோப்பியர்களின் நெருக்கடியாலேயே, ராஜாங்கத்தார் இந்தியர்களைக் கூடியசீக்கிரத்தில் துன்பப்படுத்தவே வேண்டும். இதில் சந்தேகமில்லை யென்று Mr. ஆண்ட்ரூஸ், Mr. போலக் இருவரும் கூறுகின்றார்கள். தற்காலத்தில் நேடால் சட்ட சபையில், இந்தியர்கள் இப்பொழுது அனுபவித்து வரும் சுதந்திரங்களைப் பிடுங்குவதற்கே சில புதிய சட்டங்களை சிருஷ்டிக்க ஐரோப்பியர்களுக்குள் ஓர் கலகம் நடக்கின்றது. இவைகளால் இந்தியர்களுக்கு சொந்தமான "வோட்டை" யும், தங்கள் வழக்குகளில் நியாயத்திற்காக மேல் கோர்ட்டாருக்கு அப்பீல் செய்வதற்குள்ள இந்தியரின் ஸ்வாதீனத்தையும் அபகரிக்க எண்ணுகின்றார்கள். மேலும் டர்பன் நகரத்தில், முனிசிபல் எல்லைக்குள் நிலங்களை வாங்கவும் விற்கவும் இந்தியர்களுக்கு பாத்தியமில்லையென்று செய்து, அவர்களை பஹிஷ்காரம் பண்ணுவதற்கான மார்க்கங்களைத் தேடுகின்றார்கள். இதெல்லாவற்றையும் நாம் ஓர் அறிகுறியாக எடுத்துக்கொண்டு, இதற்குப் பரிஹாரத்தையும் தேடவேண்டும். இந்தியர்கள் கேவலம் அடிமைகளாக இருக்காவிடில் தென்னாபிரிகாவை விட்டே வெளியேறும்படியாய் நேருமென்றால் அவர்களின் ஸ்திதி பிரமாதமாகவே ஆகிவிட்டதல்லவா?

கென்யாவிலும் இந்தியர்களின் கதி இவ்வாறே. இத்தேசம், லண்டனிலிருக்கும், Mr. சர்ச்சில் என்பவரின் ஆளுகைக்குட்பட்டது. சென்ற வருஷம் நடந்த "இம்பீரியல் கான்பரென்சில்", மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்கிரவர்த்தியின் ஐரோப்பிய பிரஜைகளுக்கு சமானமாகவே இந்தியர்களும் இனிமேல் நடத்தப்படவேணுமென்று அங்கு வந்தவர்களெல்லோரும், Rt. Hon. சர்ச்சில் உள்பட, ஒப்புக்கொண்டார்கள். ஆனாலும் கென்யாவில் இந்தியர்கள் சிறுமைப் படுத்தப்படுவதைக் கண்ணுற்றும், ஐரோப்பியர்களின் கக்ஷியையே இவரெடுத்துப் பேசுகின்றார். இத்தேசத்தில் இந்தியர்கள் திக்காரம் செய்யப்படும் விதத்தை நாம் சொல்லப்புகின், இது நிரம்பவும் விஸ்தாரமாகுமென பயந்தே, இத்துடன் நிறுத்துகின்றோம். கென்யாவுக்கு வந்திருக்கும் வாழ்வெல்லாம் இந்தியர்களாலேயே என்பதை இவர் முற்றிலும் மறந்து விட்டார்.

இதுதான் சமயம். இதை நாம் நழுவ விடுவது பிசகாகும். "இம்பீரியல் கான்பரென்சில்" கூடிப் பேசியிருந்தாலும், இந்தியர்களுக் கொருபோதும் விடிவுகாலமில்லை யென நாம் எண்ணக் கூடாது. இந்தியா கவர்மெண்டார் இவ்விஷயத்தில் அழுத்தமாகவே நடப்பார்களென்று நம்புகிறோம். மேலும் இந்தியா முழுவதும் நாம் திரளற்ற கூட்டங்கள் கூடி, இவ்வக்கிரமத்தை இனி நாம் பொறுக்கமாட்டோம் என்பதை பிரிடிஷ் மந்திரிகளிடமும், தென்னாபிரிகா, பிஜி, இவ்விரு கவர்மெண்டாருக்கும், திடத்துடன் தாமதமன்றியில் நாம் தெரிவிக்கவேண்டும்.

லார்ட் வின்டர்டன்

சில மாதங்களுக்குமுந்தி, இந்தியாமந்திரியாயிருந்த Rt. Hon மாண்டேகு தனது உத்தியோகத்தை விட்டு விடும்படி நேர்ந்ததும், அவருக்கு பதிலாய் லார்ட் பீல் என்பவர் அந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டதும், நமது அன்பர்களின் ஞாபகத்திலிருக்கலாம். Mr. மாண்டேகு சென்றவுடன் இந்தியர்களுக் கிருந்த செல்வாக்கும் கூடவே போய்விட்டதென இப்போது நன்றாய் விளங்குகின்றது. காமன்ஸ் ஸபையில் சமீபத்தில் லார்ட் வின்டர்டன் பேசிய பேச்சிலிருந்து, முன்னிலுமதிகமாய்ப் பல கார்யங்கள் இந்தியர்களின் க்ஷேமத்திற்கு விரோதமாகவே முடியுமென்று பல ராஜ்யதந்திரிகள் பயப்படக் காரணமுண்டு. "நமக்கு எதையும் பிரிடிஷார் சாதித்துவைப்பார்கள்." என்ற நிச்சயத்துடனிருந்த வர்களும் தற்காலத்தில் பிரபலமாய் ஸந்தேகப் படும்படி நேர்ந்து விட்டது. "இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி" யில் ஓர் முக்கிய மெம்பராயிருக்கும் ஜம்னாதாஸ் த்வாரகதாஸ் என்பவர் இவ்விஷயமாய்க் கலக்கங்கொண்டிருப்பதை நாம் அறிவது தகும். இந்தியா கவர்மெண்டாரால் ஓர் பிரதானமான கமிட்டியில் மெம்பராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். "அஸெம்ப்ளி" மெம்பர்கள் அநேகர் ஒன்று சேர்ந்து ஸ்தாபித்திருக்கும் "நாஷனல் கக்ஷியாரின்" காரியதரிசியாகவும் நன்கு மதிக்கப்பட்டு வருகின்றார். இவர் தனதபிப்பிராயங்களை ஓர் பத்திரிகைக்காரரிடம் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

"சமீபத்தில் லார்ட் வின்டர்டன் காமன்ஸ் சபையில் பேசியபேச்சின் சம்பந்தமாய், நான் எனது எண்ணங்களைத் தெளிவாக விடுத்துச்சொல்வது அவசியமாகின்றது. லார்ட் வின்டர்டன் இம்மாதிரியாகத் தனதுள்ளத்தை வெளியிட்டது எனக்கெவ்வித ஆச்சரியத்தையும் உண்டாக்கவில்லை. ஏனென்றால் நானிதை வெகுகாலமாகவே எதிர்பார்த்திருந்தேன். Rt. Hon. மாண்டேகு தன் வேலையை விட்டகன்றதும், இந்தியாவின் விஷயத்தில் பிரிடிஷ் மந்திரிகளின் நோக்கங்களும் மாறிவிட்டதை நான் எளிதில் கண்டேன். என்ன தான் நயவார்த்தைகளால் தனது கருத்தை மறைப்பதற்கு முயன்றாலும், லார்ட் வின்டர்டனின் உபன்யாசத்தை இலேசாய் இந்தியர்கள் எடுத்துக்கொள்வது சாத்தியமில்லை. மகாத்மா காந்தி பக்கத்தார் நாட்டின் முன்னேற்றத்தை ஒருபுறம் தடுத்து நிற்கையில் Mr. மாண்டேகுவும் இந்தியா மந்திரியாக இல்லாததால், இந்தியர்களை நெருக்குவதிலேயே கண்ணாயிருக்கும் ஆங்கிலேயர்களின் கக்ஷி பிரதிதினமும் வலுக்கின்றது. இந்தியாவுக்கும் இங்கிலண்டுக்கும் பொருத்த கேட்டைத்தான் இது விளைவிக்கக்கூடுமே ஒழிய, வேறு எவ்வித நன்மைக்காகவும் இக்காலம் நமக்குக்கிட்டவில்லை."

பத்திரிகைக்காரர்: அப்படியானால்தாங்கள் இதன் நிமித்தம் அதிருப்தியடைவதைத் தவிர, "அஸெம்ப்ளி" மெம்பர்களுக்கு லார்ட் வின்டர்டன் செய்த ஸ்தோத்திரமயமான ஸம்ஹாஸ்யார்ச்சனையைத் தாங்கள் பொருட்படுத்தவேயில்லை.

ஜம்னாதாஸ்: ஆம் ஸ்தோத்திரமென்றாலும்,எல்லாம் கேவலம் உதட்டு வார்த்தைகளே. ஏனெனில்

நாங்கள் சட்டசபையில் சொன்ன தெல்லாவற்றையும் இவர் கூசாமல் தள்ளிவிட்டார். இந்தியாவில் ஸைன்யத்திற்காக வென்று இப்பொழுது செய்யப்படும் அநியாயச்செலவு குறைக்கப்படவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்ததற்கு லார்ட் வின்டர்டன் என்ன பதிலளித்தார்? சைன்யத்திற்காக இவ்வளவு கோடி முழுவதும் அவசியமென்றும், ஒரு காசுகூட அக்கிரமமாய் செலவழிக்கப் படவில்லை யென்றும் இவர் நமக்குக் கதை பேசுகின்றார்! இரண்டாவது, சகல உத்தியோகங்களிலும் இந்தியர்கள் காலக்கிரமத்தில் இன்னமும் அதிகமாய் நியமிக்கப் படவேணுமென்று நானே "அஸெம்ப்ளி" யில் ஓர் ஆலோசனை சொன்னதும் மேலும் அது அங்கே ஒப்புக்கொள்ளப்பட்டதும் தங்கள் ஞாபகத்திலிருக்கலாம். அதைப்பற்றித்தான் லார்ட் வின்டர்டன் எவ்வாறு தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்? இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் தீராததோர் மனஸ்தாபத்தை உண்டுபண்ணுவதாய் அவர் எங்கள்மீது குற்றம் சாட்டியது வியப்பையுண்டாக்குகின்றது. வர்ண வித்யாஸத்தாலேயே, உயர்தர வேலைகளில் இந்தியர்களைக்குறைவாய் அமர்த்துவதென்ற பிசகை நாங்கள் திருத்த எண்ணினோம். ஆனால் லார்ட் வின்டர்டன், இப்பொழுது இந்தியாவில் நடந்து வருகிறபடியே என்றைக்கும், இந்தியருக்கும் பிரிடிஷாருக்கும் இவ்வேற்றத்தாழ்வு இருப்பது யுக்தமென்று சொல்வதோ சரியாகும்?

பத்திரிகைக்காரர்: பின்பு தாங்கள் கேவலம் ஜாதிபேதத்தால் இவ்வாலோசனை சொல்லவில்லை.

ஜம்னுதாஸ்: ஆம், ஒருபோதும் இல்லை. மேலும் அப்படிப்பட்ட வித்தியாசங்களைத் தொலைப்பதற்காகவே நான் அவ்வழியில் நடந்தேன். ஆனால் லார்ட் வின்டர்டன் இதைப்பற்றிப் பேசியவிதமும், மேலும் I.C.S. இல் இருக்கும் ஆங்கிலேயர்கள் யதேச்சையாய், அவர்கள் இஷ்டப்படியே பென்ஷனுடன் நினைத்த பொழுது இங்கிலண்டுக்குத் திரும்பி விடலாமென்று இவர் தேறுதல் சொன்னதும், விஷமத்தில் புத்தியுள்ளவர்களைக் கலகம் செய்வதற்கென்று தூண்டுவதுபோல் இல்லையா? ஆகிலும் இந்தியர்களின் அபிவிருத்தியை நாடுகிறவர்களும் I.C.S. உத்யோகத்திலிருப்பவர்களுள் பலர் இருக்கின்றார்களென்றே நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

பத்திரிகைக்காரர்: "அஸெம்ப்ளி" யில் இந்தியர்களுக்கின்னமும் சுதந்திரங்கள் சடுதியில் பிரிடிஷ் கவர்மெண்டார் தரவேண்டுமெனத் தங்கள் கோரிக்கையின் சம்பந்தமாய் லார்ட் வின்டர்டன் பேசியதைப்பற்றி யென்ன நினைக்கிறீர்கள்?

ஜம்னுதாஸ்: நானும் அதின் விஷயமாகவே சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். லார்ட் வின்டர்டன் இதில் எங்களைத் துடுக்காகவே அலக்ஷியம் செய்துவிட்டார். "அஸெம்ப்ளி" யில் இருக்கும் நாம் எங்களுக்குள்ள மதிப்பும் அதிகாரமும் போதவில்லை யென்றால், லார்ட் வின்டர்டனுக்கென்ன? அவரோ லண்டனில் காமன்ஸ் சபையில் வீற்றிருக்கிறார். பின்பு அவருக்குத்தெரியாத விஷயங்களா நமக்குப் புலப்படக் கூடும்?

பத்திரிகைக்காரர்: பிறகு, தங்களுக்கு முற்றிலும் அவசியமானவை யென்றே தோன்றும் சுதந்திரங்கள் என்ன?

ஜம்னுதாஸ்: முன்பு நான் பலதடவை கூறியதையே மறுபடியு மிங்கு விஸ்தரிக்க வேண்டியதில்லை. நாங்கள் கோரும் சுவாதீனத்தின் சாரம் சமாவது, இந்தியா கவர்மெண்டார் முன்னிலும் ஆயிர மடங்கு ஜனங்களின் பிரார்த்தனைகளுக்கிணங்க வேண்டுமென்பதும், மேலும் இங்கிலண்டில் வசிக்கும் இந்தியா மந்திரி, எங்களுக்குள் நாங்களே தீர்த்து கொள்ளக்கூடிய விஷயங்களில் இனிமேல் தலையிடாமலிருக்க வேண்டுமென்பதுமே. ஆனால் என்னதானிருந்தாலும், Mr. மாண்டேகுவுடன் இந்திய ராஜாங்கத்தைப் பற்றிய ஞானமே பிரிடிஷ் மந்திரிகளிடமிருந்து போய்விட்டது.

பத்திரிகைக்காரர்: இது இந்தியா கவர்மெண்டைப்பற்றி? மற்ற மாகாணங்களின் சம்பந்தமாய்த் தாங்கள் நினைப்பதெப்படி?

ஜம்னுதாஸ்: நான் "அஸெம்பளி" யிலிருப்பதால், மந்திரி பதவியை வகிக்கும் லாலா ஹரி கிருஷ்ணலால், மியன் பஸ்லி ஹுஸேன் என்னும் எனது நண்பர்களிருவரின் அனுபோகத்தைக் கொண்டே, 'டையார்கி' என்றதோர் நவீன ராஜாங்கமுறை கொஞ்சமேனும் உபயோகப் படவில்லையென நான் உறுதியாகச் சொல்லுவேன். இவர்கள் பஞ்சாப் கவர்மெண்டின் மந்திரிகள். வேறு மாகாணங்களிலிருக்கும் மந்திரிகளும் இவ்வபிப்பிராயத்தைத் தான் தெரிவித்திருக்கிறார்கள். (அரசாக்ஷி என்னும் நாட்டியத்தை எந்த தேசத்திலாவது பல கூத்தாடிகள் ஒன்று சேர்ந்து ஆடியிருக்கிறார்களென்பதை நாம் எப்பொழுதாவது கேள்விப்பட்டதுண்டோ?)

பத்திரிகைக்காரர்: இந்தியாமந்திரி அனாவசியமானவைகளில் தலையிடக் கூடாதெனத் தாங்கள் எண்ணுவதும் என்?

ஜம்னுதாஸ்: ஏறக்குறைய நான்கு வருஷகாலமாய், இந்தியா, இங்கிலண்ட், இவ்விரு தேசங்களுக்காகப் பாடுபட்டிருக்கும் ஒருவரை ஓர் நொடியில் துரத்திவிட்டவர்களிடம் எங்களுக்கென்ன விச்வாசமுண்டாகும்? எதையும் சமயோசிதமாய்க் கலங்காமற் செய்யும் அசுப்பாவம் படைத்தவர்கள் இந்தியாவின் விஷயத்தில் என்றைக்காவது யோக்கியமாய் நடப்பார்களென்று நாம் நம்புவது மூடத்தனமேயல்லவா? தங்களுடைய பெருமையைக் காப்பாற்றுவதின் நிமித்தம், பிரிடிஷ் மந்திரிகள் தங்கள் சூதாட்டத்தில் இந்தியாவையும் ஓர் காயைப்போலவே ஆடிவிடுவார்கள்.

பத்திரிகைக்காரர்: இந்தியா மந்திரி இதுகாறும் தலையிட்டதால் என்ன விபத்துகள் நேர்ந்திருக்கின்றன?

ஜம்னுதாஸ்: விபத்துகளா—அவைகளுக்கொரு போதும் குறைவிருந்ததில்லை. இது யாருக்குத்தான் தெரியாது? முதலாவது, சைன்யச்செலவை பெருத்துக்கொள்ளுங்கள். இங்கிலண்டிலுள்ள யுத்தமந்திரிகள் ஆட்டிவைத்தபடி இவ்விந்தியா மந்திரியும் ஆடுவதாலல்லவோ, இவ்வளவு கோடி ரூபாய் ஒவ்வொரு வருஷமும், ஜனங்களுக்கு ஹிதமென்பதன்னியில், வ்யயிக்கப்படுகின்றது. எங்கள் பணத்தை, எங்கள் தேசத்தில் நாங்கள் செலவிடுவதற்கு சீமையிலிருந்துதபாலில் உத்திரவு செய்வதென்றால், யார்தான் சகிப்பார்கள்? மேலும் சீமைத்துணிகள் சம்பந்தமாயும், Mr. மாண்டேகு இன்று வரையில் செய்துவந்ததற்கு முழுவதும் விபரீதமாகவே, லார்ட் பீல், லார்ட் வின்டர்டன் இவர்களின் ராஜ்யத்தில் இப்போது எல்லாம் நடைபெறுகின்றன. இங்கிலண்டிலிருந்தே யாகிலும், இதர தேசங்களிலிருந்து எங்கள் துணிகளை வருவித்துக் கொள்வதில் நாங்களே யஜமானர்களென்பதை Rt. Hon. மாண்டேகு, ஒருவித சந்தேகத்திற்கு மிடங்கொடாமல், ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அஃதப்படியிருக்க, லார்ட் வின்டர்டன் இதை அங்கீகரிக்கவேயில்லை, வெறு வார்த்தைகளாகிய ஜாலவித்தையால், மிகப் பெரியதோர் இந்தியாபி

மானிபோல நடித்து, எங்களை ஏமாற்ற முயன்றிருக்கிறார். அது நிஜமே. ஆகிலும், மான்சஸ்டெர் வியாபாரிகளின் விருப்பப்படியே, தற்காலத்தில் இந்தியா மந்திரியாயிருப்பவர் எதையும் செய்யத் துணிவாரென்று லார்ட் வின்டர்டன் பகிரங்கமாய்க் காமன்ஸ் சபையில் சொல்லியிருக்கிறார்.

பத்திரிகைக்காரர்: அதிலென்ன அவ்வளவு விசேஷமான மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன?

ஜம்னாதாஸ்: மாறுதல்களில்லாமல், பின்பு என்ன?

பத்திரிகைக்காரர்: ஆனால் இதிலொன்றும் இந்தியா மந்திரியின் நோக்கங்களில் மாறுதலில்லையென்று லார்ட்வின்டர்டனே தெளிவாய்ச் சொல்லியிருக்கிறாரல்லவா?

ஜம்னாதாஸ்: ஆம், அது உண்மைதான். ஆனால் அவர் முன்னும் பின்னும் சொன்னதை யோசிக்குங்கால், எங்களைக் குழந்தைகளென்றெண்ணி முழுவதும் அலக்ஷியமாகவே பேசியிருப்பதாய் நான் நினைக்கிறேன். ஏனம் என்றாலும், இவர் வார்த்தைகள், கொடுக்குள்ளவைகள்போல், கொட்டிப் புண்படுத்தியிருக்கின்றன. இவைகளைத் திருத்துவதற்காக இந்தியாவில் உடனே ஓர் ஆரவாரம் நாம் செய்யத்தான் வேண்டும். "அஸெம்ப்ளி"யிலும் இதைப்பற்றியே விவாதம் செய்யப்போகின்றோம். சட்டங்களை யனுசரித்தே வாக்குவாதம் செய்யப்போகின்றோம். சட்டங்களை யனுசரித்தேவாக்குவாதம் செய்தும், மேலும் ஓர் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கியும், நம் சுதந்திரங்களை நாம் பெறக்கூடுமென்றே, கலங்காத மனதுடன், இப்பொழுதும் நம்பியிருக்கின்றோம்.

Rt. Hon. ஸ்ரீனிவாச சாஸ்திரியார்

Rt. Hon. V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரவர்கள், ஆஸ்டிரேலியாவில, மிகுந்த மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டதாயும், அங்கு அவர் பல ராஜவிருந்துகளில் இந்தியர்களின் கக்ஷியை யெடுத்து வாதித்ததாகவும் தந்தி மூலமாய் நாம் அறிகின்றோம். மெல்போர்ன் நகரத்தில், ஆஸ்டிரேலியர்களின் பார்லிமெண்டில் இவருக்களிக்கப்பட்ட ஓர் பெரியவிருந்தில், அநேக முக்யமந்திரிகளும், மெம்பர்களும, ஹைகோர்ட் ஜட்ஜுகளும், வந்திருந்தார்கள். பிரதம மந்திரியாயிருக்கும் ஹியூஸ் என்பவர் நமது சாஸ்திரியாரைத் தம் தேசத்தினருக்கு அறிமுகம் செய்யுங்கால், அவரை நிரம்பவும் புகழ்ந்து கூறியிருக்கின்றார். ஸ்ரீமான் சாஸ்திரியாரும் தனது வந்தனத்தைத் தெரிவித்ததுடன் இந்தியர்கள் அத்வீபத்தில் படும் கஷ்டங்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் ஏதாவது பரிஹாரம் செய்யப்படவேண்டுமெனத் தயங்காமல் கூறினார். சென்ற வருஷத்தில் லண்டனில் நடந்தேறிய இம்பீரியல் கான்பரென்ஸில், பிரதம மந்திரியாகிய ஹியூஸ் இந்தியர்களுக்காக எவ்வளவு தூரம் தனது தாபத்தைக் காட்டினாரென்பதை அப்போது சாஸ்திரியார் சந்தோஷத்துடன் தெரிவித்தார். ஹியூஸ் என்பவர் அவ்வளவு தூரம் தைரியத்துடன் நம்மைத் தாங்காத பக்ஷத்தில், Rt. Hon. சாஸ்திரியார் இப்போது செய்யப்புகுந்திருக்கும் காரியத்தில் அநேகாயிரம் இடையூறுகள் இருந்திருக்குமென யெங்கும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. இந்தியர்கள் அத்தேசத்தில் ஆங்கிலேயர்களால் தங்களுக்கு சரிசமானமாய் நடத்தப்படவேண்டுமென்றும், மேலுமெல்லா விவகாரங்களிலும் இந்தியர்களுக்கும் உரிமைகள் அனைத்தும் அளிக்கப்படுவதவசியமென்றும், ஸ்ரீமான் சாஸ்திரியார் வற்புறுத்தியிருக்கின்றார். இத்துடன் ஐரோப்பியர்களுக்குக் கொடுப்பது போலவே இந்தியர்களுக்கும், அவர்கள் கிழத்தனத்தாலும் அங்கங்களின் ஊனத்தாலும் குறைவடையும்போது, ராஜாங்கத்தார் பென்ஷன் தரவேண்டுமென்றும் வாதித்தார். ஆசியா கண்டத்தில் பிறந்து வளர்ந்தவர்களுள், இந்தியர்கள் பிரிடிஷ் ஏகாதிபத்யத்தின் அங்கத்தினராக வாய்த்திருப்பதால், மற்றவர்களுக்கிருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தியர்களுக்கு நிச்சயமாய் சகல சுதந்திரங்களையும் உடனே யளித்தல் யுக்தந்தான் என்பதை சுட்டிக் காட்டினார். "தற்காலத்தில் ஆஸ்டிரேலியாவிலிருக்கும் ஓர் இரண்டாயிரம்" இந்தியர்களுக்கு முழு சுவாதீனத்தையும் கொடுப்பதால் என்ன தீங்குகள் "உங்களுக்கு நேரிடக்கூடும்?" என்று சாஸ்திரியார் சொல்ல, அங்கிருந்தவர்களிலொருவர், "பிரிடிஷ் ஏகாதிபத்யத்திற்கென்ன பாதகமுண்டாகும்?" எனக்கேட்டார். இந்தியர்களைச் சிறுமைப்படுத்துவதால் பிரிடிஷ் ஏகாதிபத்யத்திற்குத்தான் நஷ்டமும் ஹானியுமேற்படுமென்று ஸ்ரீமான் சாஸ்திரியார் உடனே பதிலுரைத்தது நமக்குத் திருப்தியையுண்டாக்குகின்றது.

கர்னல் வெட்ஜ்வுட்

காமன்ஸ் சபையில் ஓர் பிரபலமான மெம்பரும், நமது தேசத்திற்கு எக்காலத்திலும் பேருதவி புரிந்திருப்பவருமான கர்னல் வெட்ஜ்வுட் என்பவர் பர்மாவிலுள்ள தனது நண்பரொருவருக்கெழுதியிருப்பது, இக்கால வர்த்தமானங்களை யோசித்தால், மிகவும் முக்யமானதாகவே நமக்குத் தோன்றுகின்றது. இக்கடிதம் பர்மா பத்திரிகைகளிலொன்றில் வெளி வந்திருப்பதால், நாமும் இதை இங்கே எழுதுவது பிசகாகமாட்டாது.

"ஜூன் முதல் தேதி.

இம்மாதம் 12ம் தேதி திங்களன்றபதினம், பர்மா சீர்திருத்தங்களைப் பற்றிய சட்டம் இக்காமன்ஸ் சபையின் முன் வரப்போகின்றது. அன்று அதைப்பற்றியே ஓர் வாக்குவாதம் உண்டாகும். மிஸ்டர் மாண்டேகுவையும் இதில் அக்கறை பாராட்டியுழைக்க நான் சித்தப்படுத்தியிருக்கின்றேன். இச்சீர்திருத்த சட்ட சம்பந்தமாய், நான் எண்ணியவைகளெல்லாம் கைகூடாவிடினும், நீங்கள் (பர்மாக்காரர்கள்) ஒருபோதும் அதைரியப்படக் கூடாது. உங்கள் நாட்டிலும் (பர்மாவிலும்) இருகக்ஷியிருப்பதையும், அவர்களின் தீவிரமான அபிப்பிராய பேதங்களையும் நான் நன்கறிவேன். இந்தியாவிற்போலல்லாது, பர்மாவில் நீங்கள் இச்சட்டத்தை, அதில் என்ன குற்றங்களிருந்தாலும், ஒருவாறு ஒப்புக்கொண்டே, மென்மேலும் ஸ்வராஜ்யத்திற்காகப் பாடுபட நிச்சயிக்கவேண்டும். பர்மாவிலுள்ள சட்ட சபைகளில் நீங்கள் ஸ்தானங்களையபேக்ஷித்து நிற்காமல் போனால் அது முற்றிலும் தவறேயாகும். சட்டசபைகளில் இருந்துகொண்டே, ராஜாங்கத்தாரை யெதிர்த்து நின்றால்தான், உங்கள் மனோரதங்கள் பலிக்கக்கூடும். உங்களுக்குள்ளேயே மனஸ்தாபங்களுண்டாகின், அவை கவர்மெண்டாருக்கோர் பலமாக மாறிவிடுமென்பதை ஒருபோதும் மறவாதீர்கள்!"

இத்துவனியில் எழுதப்பட்ட இக்கடிதம் யாருக்கும் தெரிவது யுக்தமே. சென்றவாரத்தில், ஸ்ரீமான் ஐயகர் என்பவர் மகாத்மாவின் உத்திரவுபடி வெகுகாலம் தனது வக்கீல் உத்தியோகத்தை விட்டிருந்தும், இப்போது தன் தொழிலை நடத்த ஆரம்பித்து விட்டாரென சொல்லப் பட்டது. இவர்

மிகவும் உண்மைவாய்ந்தவர். பம்பாய் ஹைகோர்ட்டில் அபாரமாக சம்பாதித்து வந்த இவர் நெடுநாள் தன்னுத்தியோகத்தைத் துறந்திருந்தது சாமான்யமான காரியமல்ல. ஆகிலும் இப்போது தன்னுடைய நடத்தையைத் தானே தீர்க்கமாய்ப் பரிசோதனை செய்ததின் பலனாக, மகாத்மாவின் ஆக்ஞை மீறியே மறுபடியும் தன்னுத்தியோகத்தைக் கைப்பற்றியதாக இவர் தெரிவித்திருக்கிறார். மேலும் மகாராஷ்டிரத்தில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் கக்ஷியாரின் ஆணைகளைப்பரிபாலிக்கக்கூடாமல் தவித்திருப்பதாக விளங்குகின்றது. தேசத்தின் நன்மைக்காகத் தியாகம் செய்யத் துணிந்தவர்களும் இம்மாதிரியாக நினைக்கின்றார்களென்றால், அதில் ஓர் விசேஷம் இருக்கத்தான் வேண்டும். மகாத்மாவின் வார்த்தைகள் ஒவ்வொன்றையும் நாம் தெய்வ வாக்குக்கு சமானமாகவே மதித்தாலும், அவர் சொல்வதெல்லாம் கேவலம் மனிதர்களாகிய நம்மால் அனுசரிக்கப்படுவது சாத்தியமாயில்லை. இதையேதான் ஸ்ரீமான் ஜயகர் நன்றாயுணர்ந்திருக்கின்றார்.

மகாத்மாவின் கைங்கரியம்

இப்படி இஃதிருக்க, ஆந்திர தேசத்தில் மகாத்மாவின் கைங்கரியம் எவ்வளவு நேர்த்தியாய்ப் பரிபூர்ணமாகி வருகின்றது. ஸ்வராஜ்யம் பெறுவதற்கான மார்க்கங்கள் பலவென்பதை ஆந்திரர்கள் செவ்வையாயறிந்திருக்கிறார்கள். இந்தேசத்தில் மகாத்மா காந்தியைப் போலொத்த மகாபுருஷர்களின் எண்ணங்கள் கைகூடவேண்டுமாகில், அதற்குப் பூர்வாங்கமாக வேறு சில காரியங்களும் செய்து முடிக்கப்பட்டிருக்கவேணும். விரை விதைப்பவர்கள் வருமுன், நிலத்தை நன்றாய் எருவிட்டு, உழுது, பாய்ச்சலுக்காக ஜலத்தையும் சம்பாதித்து வைத்தல் இன்றியமையாததல்லவா? அதைப்போலவே, இந்தியாவிலும் நாம் எங்கும் படிப்பையும், குணத்தையும், தேசஞ்ஞானத்தையும் இடைவிடாமல் பரவச்செய்வது நம்முடைய முதற்கடமையாகும். இதை உணர்ந்தே ஆந்திர நாடுகளில் இம்முதற் கடமையைச் செய்து முடிப்பதற்கு அநேக புத்திமான்கள் முன்வந்திருக்கின்றனர். கோதாவரியில் டிஸ்டிரிக்ட் காங்கிரஸ் கமிட்டியார் பின் வரும் தீர்மானங்களைக் காரியத்திலும் சாதிப்பதற்கு மும்முரமாக வேலை செய்கிறார்கள். பஞ்சமர்களை முன்னேறச் செய்வதும், அந்த ஜில்லாமுழுவதும் வழக்குகளைத்தீர விசாரிப்பதற்காகப் பஞ்சாயத்தாரை நியமிப்பதும், இன்னும் நமது நாகரீகத்திற்கொத்த படிப்பை யளிப்பதும், இவர்களின் பிரதானமான நோக்கங்கள். பஞ்சமர்கள் என்ற ஒரு வகுப்பார் இந்தியாவில் இருக்கும் வரையில், நாம ஸ்வராஜ்யத்திற்காகப் படும் பாடுகளெல்லாம் வீணாகவே போய்விடுமென்று மகாத்மா காந்தி கதறியிருக்கிறார். நாமிதைப்பற்றி மற்றொருவிடத்தில் இவ்வாரம் எழுதியிருக்கின்றோம். மேலும், கதர் துணியையே யாரும் உடுக்க வேணுமென்றும், குடிப்பதென்னும் வழக்கத்தை வேருடன் களைந்து விடவேண்டுமென்றும், இவர்கள் விருதமெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திரதேசத்தில் ஜனங்களின் உத்ஸாகமும், ஆண்மையும், தைரியமும் எல்லையற்றது. ஒருவருஷகாலமாக தேசத்தின் நன்மைக்காகவே அனுபவித்துள்ள துன்பங்களுக்கும் எல்லையில்லை. ஆந்திர ஸ்திரீஜனங்களும் கொஞ்சமேனும் கலங்காமல், ஜெயிலவஸ்தைகளையும் ஸ்வர்க்கத்திற்கு சமானமாகிய சுகமென்றெண்ணி, ஒப்புயர்வற்ற காம்பீர்யத்துடன், பொறுத்திருக்கின்றார்கள். இவர்கள் சகித்து வந்திருக்கும் கஷ்டநிஷ்டூரங்களுக்கு முன், மாண்டவர்கள் பட்ட வருத்தம் எவ்வளவு மாத்திரம்! தர்மதேவதையே உருவெடுத்து வந்ததுபோல் அவ்வளவு மாசற்ற பெயருடன் புதிஷ்டிரர் ஒருவரே அப்பொழுது விளங்கினார். இக்காலத்திலோ ஆந்திரதேசத்தில் இவரைப்போன்ற புருஷோத்தமர்கள் பலர் காணப்படுகின்றனர். என்றால், நம்மிந்தியாவிற்கும் ஓர் நல்லகாலம் பிறந்து விட்டதென்பதற்கு இதுவே மகத்தான சகுனமல்லவா?

மோதிலால் நேரு

ஜெயிலிலிருந்து இப்போதுதான் விடுபட்டு வந்தும், இவ்வயதில் மோதிலால் நேருவின் தாளாண்மை எவ்வகைப்பட்டது! ஐக்கிய மாகாணத்தில் மகாத்மா காந்தியின் கைங்கரியார்த்தமாய் இவர் தக்ஷணத்தில் ஓயாது சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றனர். சென்ற ஜூன் மாதம் 25ம் தேதி ஞாயிறன்றையதினம், கோரக்பூருக்குப் போகும் வழியில், பாஸ்டி என்னும் ஸ்டேஷனில் கூடியிருந்த ஜனங்களுக்காக இவர் உபன்னியாசம் செய்தார். கவர்மெண்டார் என்னதான் கடுமையாக நடந்தாலும், அவர்களுக்குக் கொஞ்சமும் அஞ்சாமல், மகாத்மா காந்தியின் உபதேசங்களை முழுமனதுடன் கிரஹித்துக் கார்யத்திலும் எல்லோருமப்படியே நடக்கவேண்டுமெனப் பிரார்த்தித்தார். அங்கு வந்திருந்தவர்கள் இவர் பேசக்கேட்க மிகுந்த ஆவலுடனிருந்ததால் கவர்மெண்டார் இவர் பாஸ்டியில் பேசக்கூடாதென்று உத்திரவு செய்தது டிரெயின் நகரும் கடைசி நிமிஷம் வரையில் இவருக்குத் தெரியவில்லை. மறுநாள் திங்கட்கிழமை தினம் கொண்டாவில் பேசும்போது, அவ்விடத்திலுள்ள ஜனங்கள் காங்கிரஸ் விஷயமாக மிகவும் உதாஸீனமாயிருந்துவிட்டார்களென்றும், அவர்கள் உயிருடனிருந்தும், ஒன்றும் செய்யாததால், இறந்தவர்களைப் போலவே முடிவற்றதோர் மௌனத்தில் ஆழ்ந்துவிட்டது முற்றிலும் வியசனிக்கத்தக்கதென்றும், இனிமேலாவது உயிருள்ளவர்களைப்போல் ஒருபோதும் நடக்கத்தவறார்களென்றும், மேலும் மகாத்மாவின் ஆணையைச்செய்து முடிப்பதில் தீரர்களெனக்கீர்த்தியடைய முயலவேண்டுமென்றும் சொன்னார். அன்றைய தினமே சாயந்திரம் சீதாபூர் வந்து சேர்ந்தார். பிரமாதமாய் உபசாரங்கள் இவருக்கு அங்கு செய்யப்பட்டன. சுமார் பதினாயிரம் ஜனங்கள் இவரது வார்த்தைகளைப் பேரானந்தத்துடன் பருகுவதற்கு அவ்விடம் திரண்டு வந்தார்கள். அங்கே பேசுகையில் கவர்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் கொடுங்கோன்மைகளால் சிறிதும் மனது உடையாமல் எல்லாவற்றையும் பொறுத்து வந்ததற்கு நூற்றுக்கணக்கான தைரியசாலிகளை இவர் ஆசீர்வதித்தார். மேலும் வக்கீல் தொழிலிலிருப்பவர்கள், மகாத்மாவின் கொள்கைகளை அவர்கள் ஒப்புக்கொள்ளாவிடினும், நிர்ப்பயமாய் என்றைக்கும் ஒழுகவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். கொடுங்கோன் மன்னர்களும் நடுநடுங்கச்செய்வது வக்கீல்களின் பெருமையல்லவா? இதையே இவர் முக்கியமாய் ஞாபகப்படுத்த விரும்பியதாகக் காணப்பட்டது. மறுநாட்காலை பர்காயன், காஸ்ராய்ஸ், பாஹ்ரஸ்பூர் முதலிய இடங்களைப் பார்வையிட்டார். உத்தியோகஸ்தர்களால் ஹிம்ஸிக்கப்பட்டவர்களிடமிருந்து நேராகவே அவரவர்களின் குறைகளைப்பற்றி வாக்குமூலங்கள் வாங்கிக்கொண்டார். பாரிஸ் நகரத்தையடைந்து, அங்கிருக்கும் வியாபாரிகளுடன் கலந்து ஆலோசித்து, ஒரு 18 மாதகாலம் வரையில், அதாவது 1923, டிசம்பர் 31ம் தேதி

பரியந்தம், சீமைத்துணிகள் விற்பதில்லையென்று அவர்களை வாக்குத்தத்தம் பண்ணச்செய்தார். அங்கேயும் ஏறக்குறைய ஏழாயிரம் ஜனங்கள் இவரின் வரவை யெதிர்பார்த்திருந்தார்கள். பாரிஸி நகரத்திலும் இவர் பேசுங்கால், குற்றமற்ற போலீஸ் சேவகர்கள் அவ்வூரில் நிஷ்காரணமாய் சுட்டு வீழ்த்தப்பட்டது மிகவும் பிசகென்றும், மகாபாதகமென்றும், மேலும் அது ஜனங்களின் மூர்க்கத்தனத்தையும் பேடித்தன்மையையும் காட்டுகின்றதென்றும் நிர்தாக்ஷிண்யமாகக் கண்டித்தார்.

Hon. C. Y. சிந்தாமணி

Rt. Hon. மாண்டேகுவின் சீர்திருத்த சட்டப்படி, ஒவ்வொரு ராஜதானியிலும் இப்போது மூன்று மந்திரி ஸ்தானங்களை இந்தியர்கள் பெற்றிருப்பது நமது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இம்மந்திரிமார்களில் ஒருவரிடம் கல்வி இலாகா முழுமையும் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியர் ஒருவர் மந்திரியாயிருப்பதில் பிரயோஜனமென்ன? வடக்கே, ஐக்கிய மாகாணத்தில் Hon.C.Y. சிந்தாமணி யென்பவர் ஆக்கவர்மெண்டில் கல்வி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் தனது வேலையை நிரம்பவும் ஊக்கத்துடன் பார்க்கக்கூடியவர். உயர்தரக் கல்வி விஷயமாக நேர்மையான சீர்திருத்தங்கள் சில இவர் காலத்தில் செய்யப்படுமென்றே நமக்குத் தோன்றுகின்றது. நம் ராஜதானியில் மதராஸ் யூனிவர்சிடி ஒன்றுதான். ஐக்கிய மாகாணத்திலோ நான்கு ஸர்வகலாசாலைகளிருக்கின்றன. இவைகளுடன் இன்னமும் இரண்டு கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படும். என்றால், அலகாபாத், காசி, அலிகார், லக்னௌ, ஆக்ரா, கான்பூர், இக்ஷேத்திரங்களில் தனித்தனியே ஒவ்வொரு யூனிவர்ஸிடி ஏற்படுத்தப்படுவதால், அவைகள் படிக்கும் சிறுவர்களுக்கு மிக்கப் பிரயோஜனமுள்ளவைகளேயாகும். நமது ஊரில் ஆயிரக்கணக்காய் திரவியத்தை செலவுசெய்து நாம் பையன்களைப் படிக்கவைத்தும், அவர்கள் ஓர் நல்ல பதவியை யடையக்கூடாமல் தவிக்கின்றார்கள். நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க் கூலியும் சம்பாதிக்க முடியாது, எவ்வளவு B.A.களும், M.A.களும், அலைந்து திரிவதை நாம் பார்க்கின்றோம்! கவர்மெண்ட் ஆபீசுகளில் "மொச்சி" வேலைபார்க்க இவ்வளவு தூரம் உயர்தரப் படிப்பின் படாடோபம் எதற்காக? நம்மூரில் தான் இவ்வக்கிரமம் நடக்கும்! ஆனால் ஐக்கிய மாகாணத்திலிருப்பவர்கள் நம்மைப் பார்க்கிலும் பாக்கியசாலிகளே. ஏனெனில் அங்கிருக்கும் கவர்னரும் இம்மந்திரியும், கவர்மெண்ட் உத்தியோகங்களை யபேக்ஷிப்பவர்கள் இனிமேல் இண்டர்மீடியட் பரீக்ஷையில் தேறினால் போதுமென்று ஓர் சட்டத்தைக் கொண்டுவரப் போகிறார்கள். யூனிவர்ஸிடி கல்வியை மிகவும் உயர்ந்ததெனமதித்து, அதைத் தொழிலுக்கான படிப்பிலிருந்து பிரிப்பதற்காகவே, இதுவரையில் ஓர் அளவாக B. A. பரீக்ஷை வைக்கப்பட்டிருந்தது போய், இண்டர் மீடியட்டில் தேறினவர்கள் டிப்டி கலெக்டர்களாகவும், ஆகக்கூடுமென்று ஐக்கிய மாகாணத்திலிருப்பவர்கள் சந்தோஷத்துடன் எதிர்பார்க்கிறார்கள். தரித்திரம் குடிகொண்டிருக்கும் நம்மாகாணத்தில், இம்மாதிரியானதோர் சௌகரியத்தை நமக்கு மந்திரிகள் மனமுவந்து செய்வார்களேயாகில், அவர்கள் எப்படித்தான் சிலாகிக்கப்படமாட்டார்கள்! குழந்தைகளைப் பெறுவதற்கும் பெற்றோர்களுக்கு அளவு கடந்ததோர் ஆறுதலையுமிது கொடுக்கக்கூடும்.

புயல் காற்று.

அதிகாரம் 1

இராமேசன் சட்டப் பரீக்ஷையில் தேறுவானோ என்ற சந்தேகம் ஒருவருக்கும் இல்லை; சர்வகலாசாலைகளுக்கு அதிஷ்டான தேவதையான சரஸ்வதி தேவி தன் கரத்தில் தாங்கியிருக்கும் பொற்றாமரையின் இதழ்களை அவன்மீது சொரிந்து "மேடல்"களையும் வேறு பரிசில்களையும் அவனுக்கு மாரிபோல் அளித்தனள்.

பரீக்ஷை முடிந்ததும் தன்னுடைய ஊருக்கு போகவேண்டிய இராமேசனைப்பார்த்தால் அப்படிப் புறப்பட அவசரப்படுவனாகக் காணவில்லை. அவன் தகப்பனாரோ பரீக்ஷை முடிவான தக்ஷணமே புறப்பட்டு வரவேண்டுமென்று எழுதியிருந்தார். ஆனால் அதற்கு அவன் பரீக்ஷையின் "ரிஸல்ட்" தெரிந்ததும் புறப்பட்டு வருவதாக பதிலெழுதிவிட்டு கல்கத்தாவிலேயே தங்கியிருந்தான்.

அந்த பாபுவின் மகனான யோகேந்திரன், இராமேசன் வகுப்புப் பையன்; அவர்கள் அடுத்த வீட்டில் குடியிருந்தார்கள். அந்த பாபு பிரம்ம ஸமாஜத்தைச்சார்ந்தவர்; அவருடைய மகள் ஹேமநளினி அந்த வருஷம் எப்.ஏ (F.A.) பரீக்ஷைக்குப் போயிருந்தாள். இராமேசன் அடிக்கடி அவர்கள் வீட்டிற்கு போவது வழக்கம். சாயங்காலம் "டீ" வேளையில் அங்கே போவதில் தவறுவதில்லை. ஆனால் அவனை அங்கே வலித்திழுத்தது "டீ" மட்டுமல்ல. ஏனெனில் அவன் மற்ற வேளைகளிலும் அங்கே காணப்பட்டான் அல்லவா?

ஹேமநளினி தினந்தோறும் ஸ்நானமானதும் அவள் வீட்டு மொட்டைமாடியில் தனது கூந்தலை ஆற்றிக்கொண்டு கையில் புஸ்தகத்துடன் உலாவுவாள். அதுபோலவே இராமேசனும் தன்வீட்டு மாடிப்படி யருகில் தனித்து உட்கார்ந்துகொண்டு புஸ்தகமும் கையுமாய் இருப்பான். அவன் அப்படி இருந்த இடம் வாசிப்பிற்குத் தகுந்த அமைதியான இடம் என்றாலும், அங்கேயும் வாசிப்பிற்கு அநேக இடையூறுகள் உண்டு என்பது சற்று யோசிப்பவர்களுக்கு எளிதில் புலப்படும்.

இதுவரை இரு புறத்தாருக்கும் கல்யாணம் என்கிற பேச்சு ஒன்றும் ஏற்படவில்லை. அந்த பாபு இந்த பேச்சைக் கிளப்பாததற்கு ஒரு காரணம் உண்டு. அவர் நண்பர் ஒருவர், இளம்பிராயத்தினர், இங்கிலாந்திற்கு சட்டப்படிப்பிற்காகச் சென்றிருந்தார். ஆகவே இந்தக் கிழவரும் அவர் ஒருவேளை தனக்கு மாப்பிள்ளையாக கிடைக்கக்கூடும் என்று அவர் பேரில் கண்ணாயிருந்தார்.

ஒருநாள் சாயங்காலம் அவர் வீட்டில் "டீ" வேளையில் உற்சாகமான பேச்சு நடந்து கொண்டிருந்தது. "அக்ஷயன்" என்ற பையன பரீக்ஷையில் தேறுவதில் அவ்வளவு சமர்த்தன் அல்ல என்றாலும், "டீ" முதலிய விஷயங்களில் மற்றப் பையன்களைவிட ஒரு மாத்திரைகூட குன்றுவதில்லை. ஆகவே அவனும் ஹேமநளினியின் "டீ" மேஜைப்புறத்தில் அடிக்கடி காணப்படுவான். ஒரு நாள் அவன் "ஆண் புத்தி வாள் போன்றது; முனை கூராக இல்லாவிடினும் அதின் கனமே அதை சிறந்த படையாக ஆக்குகின்றது; பெண் புத்தி அப்படியல்ல," "பேனாக்கத்தி போன்று எவ்வளவு கூர்மையாகச் செய்தாலும் பெருங்காரியம் ஒன்றும் செய்வதற்கு பயன் படாதது" என்று இவ்வாறெல்லாம் சொன்னான்.

'அக்ஷயன்' இவ்வாறு வீண்வாதம் செய்வதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருக்க ஹேம நளினி தயாராக இருந்தாலும், அவளுடைய தமையன் யோகேந்திரனும் அவ்விதமாகவே பெண் புத்தியை அவமதித்துப் பேசினதும், இராமேசன் தட்டிக் கொடுக்கப்பட்டவன் போல் கிளம்பி எழுந்து பெண்ணாய்ப் பிறந்தவர்களின் பெருமைகளை யெல்லாம் எடுத்து பிரசங்கம் செய்யலானான்.

இப்படி பெண் பெருமையை புகழ்ந்து பேசுகிற உற்சாகத்திலே இரண்டு மூன்று கோப்பை "டீ" சாப்பிட்டு விட்டு அமருமுன் தன் தந்தை எழுதிய காகிதம் ஒன்றை வாசற் காப்பான் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்து விட்டு, தான் பேசிய கக்ஷி ஜயமடையும் சமயமாயிருந்தும் தோற்று விட்டேன் என்று ஒப்புக்கொண்டு உடனே அவசரமாகப் போகவேண்டுமென்று புறப்பட்டான். எல்லாரும் ஒரே கூச்சலாய் போகக்கூடாதென்று தடுக்கவே தன் தகப்பனார் வீட்டிற்கு வந்து காத்திருக்கிறார் என்ற விஷயத்தை சொல்லவேண்டியிருந்தது.

"ஏன்! இராமேச பாபுவின் தகப்பனாரையும் வரச்சொல்லேன். அவரும் கொஞ்சம் "டீ" சாப்பிடட்டுமே." என்றாள் ஹேம நளினி யோகேந்திரனைப்பார்த்து.

"அதொன்றும் வேண்டாம். நானே போகிறேன்" என்றான் இராமேசன் பரபரப்புடன்.

அக்ஷயனுக்கு உள்ளுக்குள் சந்தோஷம். "அவர் இங்கே ஒன்றும் சாப்பிடமாட்டார் போலும்" என்று, அந்த பாபு பிரம்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவர், இராமேசன் தகப்பனார் ஒரு வைதிக ஹிந்து என்ற வித்தியாசத்தை சுட்டிக் காட்டினான்.

இராமேசன் தகப்பனார் விரஜ மோஹன பாபு தன்பிள்ளையைக் கண்டதும் "நாளைக்காலையில் ஊருக்கு என்னுடன் புறப்படவேண்டும்" என்றார்.

"ஏன், என்ன விசேஷம், அவசரம்," என்றான இராமேசன் தலையை சொரிந்து கொண்டு. விரஜ மோஹனன்:—"விசேஷ மொன்று மில்லை." ஏன் இப்படி அவசரப்படுகிறார் என்றறிய வேண்டி இராமேசன் அவர் முகத்தை உற்றுப் பார்த்தான். அவருக்கோ தன்னுடைய பிள்ளையின் ஆவலைத் தீர்க்கவேண்டுமென்று தோன்றவில்லை.

பிறகு, சாயங்காலம் கல்கத்தாவிலுள்ள தன்னுடைய சிநேகிதர்களை பார்த்துவிட்டு வருகிறேன் என்று தகப்பனார் வெளிச் சென்றதும் இராமேசன் சவ்ஸ்தரமாய் அவருக்கு ஒரு காகிதம எழுதுவது, என்று ஆரம்பித்தான் ஆனால் "என் தந்தையாரின் திவ்விய பாதாரவிந்தங்களுக்கு" என்று ஆரம்பவசனம் எழுதியானதும் அவன் பேனா மேற்செல்லவில்லை. ஹேமநளினியிடம் வாய் மொழி ஒன்றும் கூறாதபோதிலும் அவளுக்கு கட்டுப் பட்டவன், அவளை மணப்பதே கடமை என்ற தீர்மானத்தை தன் தந்தைக்கு அறிவிக்க வேண்டியது அவசியம் என்று பல விதமாக அநேக வசனங்களை எழுதியும் கடைசியில் ஒன்றிலும் திருப்தி அடையாமல் காகிதத்தைக் கிழித்தெறிந்து விட்டான்.

விரஜமோஹனன் சாப்பிட்டுவிட்டு படுக்கையிற் படுத்ததும், இராமேசன் மாடிப்படியேறி பக்கத்து வீட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டு மனம் உளைந்து மாடியிலே மேலும் கீழுமாய் உலாவினான். பக்கத்தகத்திலிருந்து அக்ஷயன புறப்பட மணி ஒன்பது ஆயிற்று, ஒன்பதரை மணிக்கு வாசற்கதவை அடைத்து விட்டார்கள். பத்து மணிக்கு அந்தபாபுவும் தன்னறையிலுள்ள விளக்கையும் நிறுத்தி விட்டு உறங்கலானார். பத்தரை மணிக்குள் பக்கத்து வீடுமுழுவதும் நிச்சப்தமாயிருந்தது.

இராமேசனோ மறுநாட்காலையில் விடியுமுன் ஊருக்குப் புறப்பட வேண்டும். விரஜமோஹன பாபு அந்த "ரயில்" தப்புவதற்கு இடம் கொடாமல் அதிகசீக்கிரமாக புறப்பட்டு விட்டார்.

அதிகாரம் 2

இராமேசன் ஊருக்குப் போனதும் அங்கே தனக்கு கல்லியாணம் நிச்சயம் செய்திருக்கிறார்கள் என்று தெரியவந்தது. அவன் தகப்பனார் விரஜமோஹனருக்கு பாலியத்தில் தரித்திரதையும் அதிக கஷ்டங்களும் ஏற்பட்டபோது அவருடைய பாலியசிநேகிதரான "ஈசன்" என்ற வக்கீல் அவருக்கு அதிகம் உதவிபுரிந்து இருந்தார். அந்த ஈசனும் வயதாகுமுன் இறந்து போனபோது அவருக்கு ஆஸ்தி ஒன்றும் இல்லை, கடன் மட்டும் தான் மிகுத்து வைத்திருந்தார் என்று தெரிய வந்தது. அவருடைய மனைவிக்கும் ஒரு குழந்தையான பெண்ணுக்கும் சாப்பாட்டுக்குக் கூட திண்டாட்டமாய் விட்டது. அந்தப்பெண்ணுக்கு கல்லியாண வயது வந்து இருந்தது. ஆகவே, விரஜமோஹன பாபு, தன் பழைய சிநேகத்தை மறக்காமல், இராமேசனுக்கு அந்தப் பெண்ணை கல்லியாணம் செய்து கொள்வது என்று நிச்சயம் செய்திருந்தார். இராமேசனின் நண்பர்களிற் சிலர், தாங்கள் அந்தப் பெண்ணைப் பார்த்திருப்பதாயும் அவள் பார்வைக்கு அழகாயில்லை என்றும், இராமேசனுக்கு அவளை நிச்சயிக்கக் கூடாதென்றும் ஆக்ஷேபித்தும் பயனில்லை. விரஜமோஹனபாபு அவர்கள் பேச்சிற் கெல்லாம் ஒரே பிடிவாதமாய் "உங்கள் ஆக்ஷேபணை எனக்கு விளங்கவில்லையே. அவள் என்ன, பூவா பூச்சியா வெளியழகைப் பார்த்து மதிப்பதற்கு. அந்தப்பெண்மட்டும் தாயைப்போன்ற சேய் என்று சமர்த்தியாய் இருந்தால், இராமேசனை வெகு அதிர்ஷ்டசாலி என்றே சொல்லுவேன்" என்று விடையளிப்பார்.

ஊரார் இப்படி பலவிதமாக தன் கல்லியாணத்தைப்பற்றிப் பேசவே இராமேசன் மனநொந்து இதிலிருந்து எப்படியாவது தப்பவேண்டும் என்ற வியாகூலமடைந்து மன அமைதி இல்லாமல் அங்குமிங்கும் திரியலானான். ஆனால் தப்புவதற்கு வழியொன்றுமே அவனுக்குப் புலப்படவில்லை.

கடைசியில் ஒரு விதமாக தைரியப்படுத்திக்கொண்டு தன்னுடைய தகப்பனாரிடம் இதைப்பற்றி பேசுவது என்று தீர்மானித்து 'அப்பா, என்னால் இந்தப் பெண்ணைக் கல்லியாணம் செய்துகொள்ள முடியாது. உண்மையாகவே, நான் வேறிடத்தில் வாக்குக் கொடுத்திருக்கிறேன்' என்றான்.

விரஜமோஹனன் —ஆ, அதென்ன வேறு எங்கே தீர்மானமாயிருக்கிறது?

இராமேசன்— 'இல்லை, அப்படி ஒன்றுமில்லை ஆனால்——'.

விரஜமோஹனன்—பெண்ணகத்துக் காரரோடு பேசியாய் விட்டதா? தீர்மானமாக! இராமேசன்,— "இல்லை, நேரே பேசவில்லை, இருந்தாலும்——"

விரஜமோஹனன் "பேசவில்லையே; அப்படியானால் இன்னும் கொஞ்ச காலமும் பேசாமலே இருந்துவிடலாமே."

சற்று நிதானித்து இராமேசன் கடைசி பாணம் ஒன்று தொடுத்துப் பார்த்தான். இராமேசன்:— "வேறு பெண்ணைக் கல்லியாணம் செய்து கொண்டால் நான் அவளுக்குப் பொய்யனாவேன்."

விரஜமோஹனன் "அதை விட அதிகப் பாவ

மல்லவா. நான் உனக்கு நிச்சயித்த பெண்ணை மறுப்பது.''

இராமேசனுக்கு மேல் பேச வழியில்லை. ஏதாவது இடையூறு நேரிடாதா! எப்படியாவது இந்தக் கல்யாணம் நின்றுவிடலாகாதா? ஜோசியப் பிரகாரம் இந்த முகூர்த்தம் தவறினால் அடுத்த வருஷம் வரைக்கும் வேறு முகூர்த்தம் ஒன்றும் இல்லை. அந்த நாள் மட்டும் கல்யாணம் ஆகாமல் எப்படியாவது கடந்து போனால் அப்புறம் ஒரு வருஷத்திற்கு விசாரப்பட வேண்டியதில்லை.

பெண் வீடு இருக்கும் சிமுல் காட்டா என்ற ஊருக்கு ஆற்றங்கரை வழியாய் படகு மூலமாய் வெகு தூரம் போகவேண்டும். பெரிய வாய்க்கால்களை ஒன்றோடொன்று சேர்க்கும் சிறு வாய்க்கால்களிலும் படகு செலுத்தி குறுக்கு வழியாகப் போனாலும் மூன்று நாலு நாட்கள் ஆகுமென்று, விரஜமோஹன பாபு வழியில் ஏற்படக்கூடிய தடைகளை உத்தேசித்து சரியாய் ஒரு வாரத்திற்கு முன்னமேயே ஒரு சுபதினம் பார்த்து எல்லோரையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். காற்றும் சௌகரியமாகவே வீசவே, மூன்று நாட்களுக்குள்ளேயே முகூர்த்தத்திற்கு நாலுநாள் இருக்கும் போதே அந்த ஊருக்குப்போய்ச் சேர்ந்தார்கள். அங்கே போனதும் விரஜமோஹன பாபு சும்மா இருக்கவில்லை. இவ்வளவு சீக்கிரமாக புறப்பட்டு வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. அதாவது, பெண்ணின் தாயாருக்கு உடம்பு சுகமில்லை. அவளை அந்த ஊரைவிட்டு தன்னூருக்கு வந்து இருக்கச் சொல்ல வேண்டுமென்று அவருக்கு வெகு நாளாய் உத்தேசம். தன்னுடைய பால்ய சிநேகிதனை அவளுடைய புருஷன் செய்த உபகாரத்தை மறக்காதவராய் அவளை தன்னூருக்கு வரவழைத்து சுகமாய் இருக்கச் செய்ய வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டாலும் ஒட்டு உறவு ஒன்றுமில்லாத ஒருவளிடம் போய் இந்த விஷயத்தைப்பற்றி எப்படி பேசுவது என்று சங்கோசப் பட்டு இது வரை வாய் திறக்காதிருந்தார். ஆனால் இப்போது கல்யாணம் நிச்சயமானபின் அவள் சம்மந்தி அம்மாள் ஆகிவிட்டாள் அல்லவா? ஆகவே அவளிடம் போய் பேசி சம்மதிக்கச் செய்தார். அவளுக்கும் குடும்பம் என்பதெல்லாம் அந்த ஒரு பெண் தானே. ஆகையால் மாமியார் இல்லாத தன் அருமைப்பெண்ணுக்குத் துணையாக தான் அவளுடன் போவது தான் சரி என்று, ''ஊரார் என்ன வேண்டுமென்றாலும் சொல்லிக் கொள்ளட்டும். என் பெண்ணும் மாப்பிள்ளையும் இருக்கு மிடம் தான் எனக்குமிடம்'' என்று உறுதியாகச் சொல்லி முடித்தாள்.

ஆகையால் விரஜமோஹனன் இடை நாட்களை வீணாக்காமல் அந்த அம்மாள் வீட்டுச் சாமான்களை மூட்டைகட்டி தயாரிப்பதில் செலவிட்டார். கல்யாண மானதும் அந்த அம்மாளை உடன் கூட்டிக் கொண்டு போவதற்கு அவளுக்குத்துணையாக ஊரிலிருந்து சில ஸ்திரீகளையும் கூட்டிவந்திருந்தார். கல்யாணம் சரிவர நிறைவேறிற்று. இராமேசன் மட்டும் மந்திரத்தை சரியாக உச்சரிக்காமல் வேண்டுமென்று முணுமுணுத்தும் ''சுபவீக்ஷண'' காலத்தில் (வதூவரர்கள் ஒருவரை யொருவர் முதல் முதல் கண்ணெடுத்துப் பார்க்கும் விசேஷ வேளையில்) தன் கண்களை இறுக மூடிக்கொண்டும் சதா முகத்தை தொங்க விட்டுக் கொண்டும், படுக்கையறையில் புகும் வேளையில் பரிகசிக்கப் பட்டபோது வாய்த்திறவாமலும் பிறகு இராப்பொழுது முழுமையும் அந்தப் பெண்ணைப்பார்க்காமல் திரும்பிப் படுத்திருந்தும் எப்போது விடியுமென்று வெளி வந்தும் இவ்விதமாக பலவகையான தன்னுடைய மன அருவருப்புக்காட்டினான்.

கல்யாணக் காரியங்கள் எல்லாம் சரிவர முடிந்தபின், கிழவர்கள் ஒருபடகிலும் ஸ்திரீகள் ஒருபடகிலும், மாப்பிள்ளையும் மற்றச் சிறுவர்களும் இன்னொரு படகிலுமாய் எல்லோரும் புறப்பட்டார்கள். கல்யாணத்து மேளகார் நாலாவது படகு ஒன்றில் இருந்து கீர்த்தனைகளையும் தக்கடாப்பாட்டுகளையும் பாடி பொழுது போக்காக கூடவந்தார்கள்.

பகல் வேளை முழுவதும் வெய்யில் தாங்க முடியவில்லை. ஆகாயத்தில் ஒருமேகம் கூட காணப்படவில்லை. அடிவானம் மட்டும் சற்று மங்கலாயிருந்தது. கரையில் இருந்த மரங்கள் தீப்பட்டு எரிவதுபோல் பிரகாசித்தன. ஒரு இலை கூட அசையவில்லை. படகு ஓட்டுபவருக்கு வேர்வை ஆறய்பாய்ந்தது.படகுகாரர் அஸ்தமனத்திற்குமுன்னமேயே விரஜமோஹனரிடம் ''இங்கேயே படகுகளை கட்டிவிடவேண்டும்; மேலே போனால் அநேக மைல்கள்வரை படகுகள் தங்குவதற்கு இடமில்லை.'' என்று சொன்னார்கள்.

ஆனால் விரஜமோஹனருக்கு கூடியசீக்கிரம் ஊர் போய்ச்சேரவேண்டுமென்று ஆசை. அவர்களைப் பார்த்து ''இங்கே நிறுத்துவது சரியில்லை. முன்னிலாத்தானே, இன்னும் கொஞ்சதூரம் போகலாம். 'பால ஹட்டா' விற்குப் போய்விடலாம். கூலி ஏறக்குறைய வாங்கிக் கொள்ள்ளாம்'' என்று அவர்களை உற்சாகப்படுத்திவிட்டார்.

படகுகாரர்கள் மறுபடியும் படகுகளை நடத்தலானார்கள்; ஒருபுறம் மணற்காடு வெய்யிலில் ஜொலிக்கவும், மற்றொருபுறம் கரை மேடு வெய்யிலில் பொரியவும், இவற்றினிடையே படகுகள் சென்றன. சற்று சென்றதும் குடியுண்டவன் கண்போல் சிவந்து, சந்திரன் தீப்பட்டு எரிவான் போல் உதயமாயினன். ஆனால் ஆகாயத்தில் ஒரு மேகம்கூட இல்லை. பிறகு, திடீரென ஒரு பெரு முழக்கத்துடனும் இடியுடனும் ஆகாயம் இருண்டது.ஒடிந்து விழுந்த மரக்கிளைகளும் கொப்புகளும் புல்லும் வைக்கல்போர்களும் மண்ணும் மணலும் எல்லாவற்றையும் சுழற்றி வாரிக்கொண்டு வந்தது புயல்காற்று. 'மெள்ள! மெள்ள! பிடித்துக்கொள்! சாக்கிரதை! ஐயோ! ஐயோ!' என்ற சப்தம் காதைக் கிழித்தது.

பிறகு நடந்தது யாருக்குத் தெரியும். புயல் காற்று அந்த படகுகள்மீது அடித்து மோதி எல்லாவற்றையும கலக்கிக்கவிழ்த்தது. படகுகள் இருந்த இடம் தெரியாமல் சிதறுண்டன.

மலையாளத்திய மாந்திரிகர்கள்.

மந்திரத்தால் எதையும் வெல்லலாம். மந்திரத்திற்கென்று தனியாகவே ஓர் சாஸ்திரமும் உள்ளது. மந்திர பலமே பலம். ராமாயணத்தில் ராகவன், தனது தர்மபத்னியாகிய சீதையை ஹிம்ஸித்ததோர் அசுரனை தண்டிப்பதற்காக, ஒரு துரும்பையே மந்திரத்துடன் ஜபித்து, அஸ்திரமாகப் பிரயோகித்தாரென்று நாம் கேட்டிருக்கிறோம். எவ்வுலகிலும் அவனை அது துரத்திச் சென்றதால், மீண்டும் அவ்வசுரன் ராமனையே சரணமடைந்தான். மந்திர சாஸ்திரத்தில் பிரசித்தி பெற்றவர்கள் மலையாளத்தில்அநேகர் இருக்கின்றனர்.பிறரைக் கெடுக்கவும் விடுவிக்கவும், இத்தேசத்திலுள்ள மாந்திரிகர்கள் மிக்க சமர்த்தர்கள். அங்கே இதை ஓர் தொழிலாகவே நடத்துகின்றார்கள். மந்திர மென்றால், அதைக் கற்றவர்கள் பிசாசுகளை ஓட்டவும் அறிந்திருக்கவேண்டும். மலையாளத்தில் ஒரு

என் மந்திர ஸித்தியடைந்து விட்டால் அவனைக் கண்டு அஞ்சாதவர்கள் எவருமில்லை. சில பிராமணக் குடும்பங்களில் புருஷர்களெல்லோரும் மந்திர சக்தி வாய்ந்தவர்கள். வைத்தியர்களையும், வைதீகப் பிராமணர்களையும் போல, மாந்திரிகர்களும் இதையே தொழிலாகக் கொண்டு, நிரம்பவும் திரவியம் சம்பாதித்துவர வழி யிருக்கின்றது.

அபத்தியம் செய்வதால் வியாதிகள் உண்டாவது போலவே, மந்திர சூழ்ச்சியினாலும் தீராத ரோகங்கள் உண்டாகும். பைசாசங்களை ஆராதித்து, அவைகளின் உதவியால், மாந்திரிகர்கள் தங்கள் சத்துருக்களை பிணமாக்கி விடுவார்கள். ஆகையால் மலையாளத்தில் வைத்தியர்களைப் போலவே சோதிடர்களும் மிகுந்த செல்வாக்குள்ளவர்களாய் விளங்குகின்றார்கள். வியாதியின் மூலத்தை நிருணயிக்க, நோயாளியின் ஜாதகத்தைப் பார்த்தே தீரவேண்டும். பிறரின் ஏவலென்று நிச்சயிக்கப்பட்டால், பின்பு ஜபதபாதிகளில் கைதேர்ந்தவர்களையே நாடிச் செல்வார்கள். வைத்தியம் செய்வதுடன், பிசாசுகள் ஓட்டுவதில் சாமர்த்தியசாலிகளாயிருப்பவர்களும் நோயைத் தீர்த்துவைக்க ஜபம் செய்துவருவது வழக்கம். வியாதி தெறித்தவுடன், மாந்திரிகர்களே அதிகமாய் சன்மானமடைவார்கள்.

பிசாசுகளிலும் பெரியதென்றும், சிறியதென்றும், இருவகுப்புகளுண்டு. பிரபலமான துஷ்ட தேவதைகளால் அபாயகரமாக விபத்துகள் நேரிடின், மிக்கப் பிரசித்திபெற்ற மாந்திரிகர்களின் உதவியையே தேடவேண்டும். மேலும் இவர்கள் செய்துவைக்கும் சடங்குகளுக்காகப், பொருளும் ஏராளமாகவே செலவழிக்கப்படும். கைகால்களை முடக்கும் தேவதைகளே மிகவும் பயங்கரமானவை. இவைகளை மந்திரபலத்தால் அடக்கக் கூடியவர்கள் சிலர் தானிருக்கின்றார்கள். பைசாசங்களை ஓட்டுவதே கடினமானதால், சாந்தி செய்துவைப்பவர்களுக்கு, நியாயஸ்தலத்தில் கொலைக்குற்றத்தினின்று விடுவிக்கும் வக்கீல்களுக்குப் போலவே தாராளமாய்ப் பணம்கொடுக்க வேண்டும்.

பிசாசுகளோட்டும் வன்மை மிகுந்திருக்கும் பிராமணர்கள் எல்லோரும் தேவதைகளின் உபாஸனை செய்துவருவார்கள். அவரவர்களுடைய தேவதையின் ஒத்தாசையால்தான் மாந்திரிகர்கள் சிகித்சை செய்யமுடிகின்றது. எவ்விதத்தீங்கும் வருமுன், துர்தேவதைகள் ஒன்றும் அணுகாவண்ணம், இவர்கள் காப்பாற்றவும் கூடும். அதற்காக ரக்ஷைகட்டுவார்கள். ஏவல்களுக்குள், "ஒடி" யென்னும் பிரமாதமானதோர், கெட்ட சக்தி பறையர்களுக்குள் காணப்படுகின்றது. "ஒடி" யென்ற இம்மந்திரத்தால் ஒருவனைக் கணுக்கணுவாய் ஒடித்தே விடுவார்கள்.

"கான்ஸர்" ரோகம்.

இக்காலத்தில் நாம் இவ்வுலகில் என்றைக்குமில்லாததானதோர் நாகரீகத்தைப் படைத்திருக்கின்றோமென இறுமாப் படைந்திருப்பதில் சந்தேகமில்லை. ஆகிலும் நம்முடைய நாகரீகத்தால், நாம் ஒருபோதும் பட்டிராத துன்பங்களையும் அனுபவிக்கின்றோமென்பதை நாம் நன்கறியாதது நம் மஞ்ஞானத்தாலே தான். இந்நூற்றாண்டில், நாம் எவ்வளவு பகட்டுடன் சுகமாகக் காலம் கழிக்கின்றோம் என கர்வ மடைந்திருந்தாலும், இந்நாள் சிறுவர்கள் நமது முன்னோர்களைப் பார்க்கிலும் மிகவும் ஜீவனற்றிருப்பதையும், மேலும் நோய்கள் பல புதிதாய் நம்மை வருத்துவதையும் புத்திமான்கள் எப்படி மறக்கக்கூடும்? ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு நாகரீகத்திற்குத் தகுந்தாற் போல், பிணிகளும் எங்கிருந்தோ வருகின்றன. இப்பொழுது வைத்தியத்தில் தேர்ந்தவர்கள், மரணத்தை யுண்டாக்கும் நோய்களின் சம்பந்தாய் ஆராய்ச்சி செய்யுங்கால், "கான்ஸர்" என்னும் ரோகத்தாலேயே பயங்கரமாகப் பலர் ஒவ்வொரு வருஷமும் கொல்லப் படுவதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இக்கொடும் ரோகம் எங்கும் பரவியிருப்பதாகவும் சொல்லுகின்றார்கள். நமது ஆஹாரங்களும் பழக்க வொழுக்கங்களுமே பெரும்பாலும் இதற்குக் காரணமென்றும் கூறப்படுகின்றது. சொல்பகாலத்தில் இக்கான்ஸர் வியாதியால் சயபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவரையும் கலங்கச் செய்யும். இங்கிலண்டிலும், ஸ்காட்லண்டிலும் பிரதிவருஷமும் நாற்பதாயிரம் ஜனங்களுக்கு மேல் மடிகின்றார்கள், யுனைட்டெட் ஸ்டேட்ஸ்களில் 80000த்துக்கு மேலும், இந்நோய் கண்டபின்பு ஸ்வஸ்தமாகாமலே, ஓர் பன்னிரண்டு மாதங்களுக்குள், பரமகதியடைந்தார்கள். ஆசியா கண்டத்தில் 148447, பேர்களும், அமெரிகாவில் 251438 பேர்களும், ஆஸ்டிரேலியாவில் 20335 பேர்களும். ஐரோப்பாவில் 1096716 பேர்களும் 1912—1918 வரையிலுள்ள ஐந்து வருஷத்திற்குள். இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு, யமனுலகத்திற்கே சென்றார்கள்.

இந் நோயின் காரணத்தையும், இதற்கு சிகித்சை செய்யும் விதங்களைப் பற்றியும் தீர விசாரிக்கவே சாஸ்திரஞ்ஞர்கள் சிலர் உழைத்து வருகிறார்கள். ஸர் வில்லியம் விரோ என்பவர் தனதனுபவத்தில் நாகரீகமில்லாதவர்களே இக் "கான்ஸருக்கு" எளிதில் இரையாவதில்லையென்று அபிப்பிராயப் படுகிறார். மேலும் சில வருஷங்களுக்கு முந்தி ப்ரொபஸர் ஜாலி ஊகித்தபடியே, டீ, காபி, இவைகளை அதிகமாய்க் குடிப்பதால் இந்த ரோகம் முன்னிலும் கொடுமையுடன் பாதிக்கக்கூடுமென்று லார்ட் ராய்லி என்பவர் தெரிவித்தார். சமீபத்தில் ப்ரொபஸர் ஜான் ஜாலி டீ, காபி, சிவப் பானமது இவைகளே இதற்குக் காரணமாகுமென்றும், மேலும் தானப்படி நினைப்பதற்குத் தெளிவாய் நியாயங்களும் உண்டென்றும் சொன்னார். எந்த தேசத்தில் டீ ஏராளமாய் உபயோகப் பட்டு வருகின்றதோ, அந்த தேசத்திலேயே கான்ஸரும் அதிகரித்து வருகிறதாம். மற்றொரு காரணமும் சொல்லப் படுகின்றது. டாக்டர் அலெக்ஸாண்டர், இவ்வியாதி நாகரீகத்தாலேயே விளையுமோர் மகத்தான கெடுதியென்றும், இன்னும் நாம் நிரம்பவும் 'பணிக்குடன்' சமையல் செய்வதுமே முக்கியமாய்க் காரணமாகுமென்றும் வெளியிட்டிருக்கிறார். இவரால் வாஸ்தவமாகவே டீயில் ஓர் பாதகமுமில்லையென்றும், பொங்கிவரும் வெந்நீரில் டீ தயார்செய்வதே முழுவதும் தப்பென்றும் கொள்ளப்படுகின்றன. கொதித்து ஆறின தண்ணீரை ஒரு போதும் பருகுதலாகாதென இவர் கூறுகின்றார், பசுமை மாறுதகாய் கறிகளையும், பழங்களையும் உட்கொள்ளுவதே மிகவும் சௌக்கியத்தைத் தருமென்று இவர் சொல்வதை நாம் கவனிக்கவேண்டும்.

வேண்டும்
அளவு 27 × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
டாப்பில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 3-8-0
வாரத்திற்கு ரூ. 15-0-0
MADRAS ADVERTISINGS,
10, Venkaier Street, Madras.

சஞ்சிவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை மார் முதுகு இடுப்பு	வலி	தேள் பாம்புக் பூச்சிக் விஷக்	கடி	பல் கால் காது கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணு எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்திர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிடெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர். A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

சுதேசியமானது!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில்
D. சுந்தரவரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16,
'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.